# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2022, பெப்புருவரி மாதம் 18 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2022 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம்**

[2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ. 33/2021

**2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2**. இரண்டாயிரத்துப் பதினோராமாண்டின் 13 ஆம் இலக்க, மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படு கின்றது:-

(1) அப்பிரிவின் 2 ஆம் பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "கைமாற்றப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"கைமாற்றப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும்,-

(அ) எவரேனுமாளினால் தகுந்தமுறையில் செலுத்தப்படற்பாலதான தொகைக்கு விஞ்சுதலான ஏதேனும் முத்திரைத் தீர்வையை அவர் செலுத்தியுள்ளாரென; அல்லது

(ஆ) அத்தகைய முத்திரைத் தீர்வை எந்தச் சாசனம் தொடர்பானதோ அந்தச் சாசனத்தின்மீது பிழையான முறையில் ஏதேனும் முத்திரைத் தீர்வையை எவரேனுமாள் செலுத்தியிருந்து அத்துடன், 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு அவர் ஆளாகவிருக்கவில்லையெனவும் காணப்பட்டுள்ளதென,

எழுத்தில் செய்யப்பட்டவோர் உரிமைக் கோரிக்கையின் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கின்ற அத்தகைய ஆளுக்கு அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை மாகாண சபைகளுக்குக் கைமாற்றப்படுவதற்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதியின்போது முத்திரைத் தீர்வையாகச் சேகரிக்கப்பட்ட ஏதேனும் தொகையிலிருந்து மீளளிக்கப்படுதல் வேண்டும்.”; அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(2) இரண்டாயிரத்து ஆறாமாண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழான மீளளிப்புக்கான எல்லா உரிமைக் கோரிக்கைகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ஆணையாளர் தலைமையதிபதி என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்.”.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*